செ.வெ.எண்: 241 நாள்: 25.3.2008

# வேளாண்மைத் துறை உருவாக்கிய சாதனையில் செம்மை நெல் சாகுபடி மூலம் விவசாயிகளுக்கு பலன்கள்

வேளாண்மைத் துறை அலுவலர்களின் முயற்சியால் விவசாயிகள் குறைந்த இடுபொருட் செலவில் சிறந்த மகசூல் பெற்றுள்ளனர்.

திருமதி. விஜயலட்சுமி நான்கு (4) ஏக்கர் பரப்பில் விக்கிரவாண்டி கிராமம், விழுப்புரம் மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்து வரும் சாதாரண விவசாயி. இன்று அனைத்து விவசாயிகளும் வியந்து பார்க்கும் முக்கிய நபராக உயர்ந்துள்ளார். காரணம் அவருடைய நெல் சாகுபடி மூலம் அப்பகுதியில் வியத்தகு அளவில் சாதனை புரிந்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாக இவரது வயலை பார்வையிட குழுக்களாக விவசாயிகள் வந்தவண்ணம் உள்ளனர். அவருடைய உயர்வுக்கான இரகசியம் அறிய ஆவலுடன் உள்ளனர். இதற்கான விடை செம்மை நெல் சாகுபடி முறை தான்.

செம்மை நெல் சாகுபடி என்பது குறைந்த நாற்றங்கால் பரப்பு, நீர்ப்பாசனம், கூலியாட்கள் மற்றும் விதைத்தேவை. நடைமுறையிலுள்ள நெல் சாகுபடியைவிட செம்மை நெல் சாகுபடி அதிக மகசூல் தரவல்லது என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நீர் தொழில்நுட்ப மைய விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

காய்ச்சலும், பாய்ச்சலும் முறை நீர்ப்பாசனம், உருளும் மார்க்கர் கருவியை பயன்படுத்துதல், கோனா களைக்கருவிகளை பயன்படுத்துதல், குறைந்த வயதுடைய 15 நாட்கள் கொண்ட இளம் நாற்றுக்களை ஒரு குத்துக்கு ஒரு நாற்று என்னும் அளவில் சதுர முறையில் 25 x 25 செ.மீ. இடைவெளியில் நடவு செய்வதே இச்சாகுபடியின் சிறப்பு அம்சங்களாகும்.

திருமதி. விஜயலட்சுமி பி.பி.டி. 5204 (பாபட்லா) என்ற நெல் ரகம் சாகுபடி செய்து, செம்மை நெல் சாகுபடி மூலம் எக்டருக்கு 7.6 மெ.டன் மகசூல் பெற்றுள்ளார். அந்த அம்மையார் சாதாரணமாக நீர்த்தேக்கி நெல் சாகுபடிமுறையில் ரூ.20,500/— செலவு செய்து எக்டேருக்கு 5.6 மெ.டன் மகசூல் பெற்று அதன்மூலம் ரூ.26,000/—ஐ நிகர லாபம் ஈட்டியதைவிட செலவினத்தை எக்டேருக்கு ரூ.2,750/—ஐ குறைத்து, செம்மை நெல் சாகுபடி செய்ததில் நிகர வருமானம் எக்டருக்கு ரூ.45,250/— பெற்றுள்ளார் என்பது ஒரு சாதனையாகும்.

விழுப்புரம் மாவட்ட திருமதி. விஜயலட்சுமியின் சாதனை, அனுபவம் மட்டுமின்றி, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த மாத்தூர் திருக்கல் (செஞ்சிக்கு அருகில்) சேலம் மாவட்டத்தில் உள்ள அபிவனம் மற்றும் தும்பல் (ஆத்தூர் அருகில்) விவசாயிகளுக்கும் இதேபோன்ற செம்மை நெல் சாகுபடி வெற்றிச்சாதனை அடைந்துள்ளனர். இப்பகுதிகள் அனைத்தும் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் நீர்வள, நிலவள திட்டத்தின் மூலம் செம்மை நெல் சாகுபடி திட்டம் செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு சாதனை அடையப்பட்ட கிராமங்களாகும்.

விழுப்புரம் மாவட்டத்தில் விசூர் கிராமத்தைச் சார்ந்த ரங்கநாதன் என்னும் விவசாயி பழைய நெல் சாகுபடி குறைபாடுகளை அறிந்திருந்தும் அதனை மேற்கொள்ள தயக்கம் காட்டினார். 20 ஆண்டுகளுக்கு முன் புதிய நெல் சாகுபடியை மேற்கொள்ள முன்வந்ததும் வெற்றிபெற முடியவில்லை. இம்முறை அரசு வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் பயிற்சி மற்றும் ஊக்கத்தின் மூலம் சாதனை அடைய முடிந்தது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு விவசாயி, அதிகபட்சமாக எக்டருக்கு 14.27 மெ.டன் அறுவடையும், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் மற்றொரு விவசாயி எக்டருக்கு 13.38 மெ.டன் அறுவடை செய்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் திருவளர்சோலையில் 12.85 மெ.டன் மகசூல் அடையப்பட்டுள்ளது. தேனி மாவட்டம், காட்டூர் கிராமத்தில் 11.43 மெ.டன்களும், தூத்துக்குடி மாவட்டத்தில், மணக்கரையில் 11.23 மெ.டன்களும், வேலூர் மாவட்டம், பிட்டலூர் கிராமத்தில் 11.00 மெ.டன்களும் அறுவடை செய்யப்பட்டுள்ளது. மேலும், 3 விவசாயிகள் எக்டருக்கு 10 மெ.டன்களுக்கு மேலும், பல விவசாயிகள் எக்டருக்கு 9 மெ.டன்களுக்கு மேலும் அறுவடை செய்துள்ளனர்.

இச்சாதனை செம்மை நெல் சாகுபடி மூலம் சாத்தியம் என வேளாண்மைத் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். மேலும் அவர்கள் தேசத்தில் சராசரி உற்பத்தி 3 டன்கள் எனவும் கூறியுள்ளனர். வேளாண்மைத் துறை இதன் முதல் கட்டமாக அனைத்து மாவட்டங்களிலும் மாதிரி செயல் தளைகளை அமைத்து இத்திட்டத்தினை செயல்படுத்த விவசாயிகளுக்கு வழிகாட்டியும் இதனை வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து கண்காணித்ததன் மூலமும் மற்றும் விவசாயிகளின் கூட்டு முயற்சியினாலும் இந்த உற்பத்தி சாத்தியமானது. இத் தொழில்நுட்பம் குறைந்த நீரைக்கொண்டு

30 முதல் 40 சதம் அதிக உற்பத்தி அளிக்குமென உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, இதனை அதிகளவில் பரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

செம்மை நெல் சாகுபடி திட்டத்தில் விதைகள், உரம் மற்றும் கூலி ஆட்களின் செலவினம் எப்பொழுதும் செயல்படும் முறையைவிட குறைவாக உள்ளது. இச்சாகுபடியில் குறைந்த நீரும், குறைந்த நாற்றங்கால் பரப்பும் தேவையென அறியப்படுகிறது.

மேற்படி விவசாயிகளின் வயலில் சோதனை அறுவடை மாநில அரசின் நீர்வள, நிலவள திட்டத்தின் (ஐயம்வாம் TN – IAMWARM) உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் பருவ நெல் சாகுபடி அரசின் மானிய உதவியின்றி தொடர்ந்து செம்மை நெல் சாகுபடியாகவே மேற்கொள்ளப்படும்.

நீர்வள, நிலவள திட்டத்தின் மூலம் 1,250 எக்டர் பரப்பில் செம்மை நெல் சாகுபடி, செயல்விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. இச்செயல் விளக்கங்கள் மூலம் 2,595 எக்டரில் செம்மை நெல் சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் எந்தவித மானியம், நிதியுதவி இன்றி முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். நெல் மற்றும் பயறுவகை சாகுபடி செயல் விளக்கங்களுக்கு எக்டருக்கு ரூ.10,000/– அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் வெற்றிக் கதைகளை நன்கு விளம்பரம் செய்து செம்மை நெல் சாகுபடி பயன்களை அதிகப்படுத்த அரசு முனைப்புடன் செயல் திட்டம் தீட்டி செயல்பட்டு வருகிறது.

குறிக்கோள்

செம்மை நெல் சாகுபடி மட்டுமே மையமாக கொண்டது மட்டுமே அல்ல நீர்வள, நிலவள திட்டம். விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மகசூலை அதிகரித்தலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்ட நிர்வாகம் செம்மை சாகுபடி முறை கோட்பாடுகளை பின்பற்றி பயறுவகை மற்றும் எண்ணெய்வித்து பயறுவகைகளிலும் திருந்திய முறைகளை கடைப்பிடிக்க குறைந்த செலவில் அதிக மகசூல் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் வருட திட்ட செயலாக்கத்தில், வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, மீன்வளம் மற்றும் கால்நடை துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படும் நிறுவனமாக பொதுப்பணித்துறையைச்சார்ந்த நீர்வள நிறுவனம் மற்றும் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த நீரியியல் தொழில்நுட்ப மையம் உள்ளது. இந்த நிறுவனம் விவசாயிகளுக்கான மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களை உருவாக்குதல், பரப்புதல் மற்றும் செயல்படுத்துவதே முக்கிய பணியாகும்.

நீர்வள, நிலவள திட்டம்

ஆறு வருட திட்டமாக (2007–2013) ரூ.2,547 கோடியில் 63 நீர்வடி பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. அதில் ரூ.1,500 கோடி நீர்வள மேம்பாட்டுக் கழகம் மூலம் 5,760 ஏரிகளை புணரமைப்பு செய்வதற்கும், வேளாண்மை உற்பத்தித்திறனை பெருக்குவதற்கும், தரமான விதைகள் பயன்படுத்துதல், உற்பத்தி தொழில்நுட்பம் கடைப்பிடித்தல், மதிப்புக் கூட்டல் பயிர்கள் மற்றும் அதனை சீரிய முறையில் விற்பனை செய்ய வழி காட்டுதலுக்கும் ரூ.300 கோடி பயன்படுத்தப்படும்.

வேளாண்மை பொறியியல் துறைக்கு ரூ.350 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பாசன நீர்த் திறனை அதிக அளவிற்கு உயர்த்த பயன்படுத்தப்படும்.

10.3.08

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் [illegible],
கலைவாணர் [illegible], சென்னை [illegible]